instant case, the publication does not amount to gross or wilful misrepresentation of particular Members' speeches and so I think unless there is wilful misrepresentation which is of a grave nature, this House need not be touchy about it. I think, Sir, out of a mole hill, we need not make a mountain. There are instances in which certain remarks have appeared in the press which were objectionable. In the peculiar circumstances of the case in the nature of political differences between the ruling party, and the present and other parties, we need not make much of the issue and raise a privilege matter on that. In this case, the only point is that such reflections should as far as possible be avoided and I think we can drop further proceedings at this stage. That is the only point which I am going to make.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் வீராசாமி அவர்கள் கொண்டுவந்த இந்த உரிமைப் பிரச்னைமீது எல்லாக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பத்திரிகையிலே வந்திருப்பதில், நான் இந்த அவையினுடைய உறுப்பினர்களை ஒன்றும் தெரியாத சாதாரணமானவர்கள் என்று கருதிக்கொண்டு திமிரோடு பதில் சொன்னேன் என்ற வாசகம் ஆகும். இந்த அவையில் கடந்த நான்கைந்து ஆண்டுக்காலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரிடத்திலும் நான் எந்த அளவிற்கு நடந்து கொண்டிருக்கிறேன் என்பதும் எந்த நேரத்திலேயும் நான் திமிரோடு நடந்து கொண்டிருக்கிறேனா என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். மிகச் சூடான விவாதம் நடந்துகொண்டிருக்கும்பொழுதுகூட சூடு தணியவேண்டும் என்ற முறையிலே மிகுந்த அமைதியோடும், அடக்க உணர்வோடும் நான் நடந்து கொண்டிருக்கின்றேன்.

1971-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு பதவியேற்றதற்குப் பிறகு இந்த அவையிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரையும் நான் பாராட்டி அவர்கள் எந்த அளவிற்குப் பெருந்தன்மையோடு இந்த அவையை நடத்திச் செல்கிறார்கள் என்பதையும், அவர்கள் துணையோடு இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டுமென்பதையும் குறிப்பிட்டு ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன். இந்த அவையிலே உள்ள யாரையுமே சாதாரணமானவர் என்றோ ஒன்றும் தெரியாத நிலையில் உள்ளவர் என்றோ கருதியதே இல்லை என்பதையும் திமிரோடு நடந்துகொள்ளவேண்டுமென்ற மனோநிலையே கிடையாது என்பதையும் இந்த அவையிலே உள்ள அனைவரும் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

இந்தப் பிரச்னையைக் கட்சிக் கண்ணோட்டத்திலே நோக்காமல் இந்த அவையினுடைய மரபு, இந்த அவையினுடைய உரிமை, இந்த அவையினுடைய பெருமை இவற்றை நிறைந்த கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் இந்த நேரத்திலே ஒரு எடுத்துக்காட்டைக் கூற விரும்புகிறேன். நான் இங்கே எதிர்க்கட்சி வரிசையில் துணைத் தலைவராக இருந்தபொழுது அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்களைப்பற்றி அப்பொழுது நான் ஆசிரியராக இருந்த முரசொலிப் பத்திரிகையில் கடுமையான வாசகத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள் என்று சொல்லி ஆளுங்கட்சி சட்ட மன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். முரசொலி பத்திரிகை என்று கேட்டதுமே நான் மிகுந்த ஆவலோடு அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதற்குப் பிறகு அதுபற்றி அப்பொழுதைய முதலமைசசர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னாலேயே உரிமைப் பிரச்னையைப் பற்றி மற்றவர்கள் பேசுவதற்கு முன்னாலேயே நான் அதன் ஆசிரியராக இருக்கிறேன், ஆசிரியரே தலையங்கம் எழுதுவது இல்லை, பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு இது தெரியும், ஆசிரியர் ஊரில் இல்லாத நேரத்தில் துணை ஆசிரியர்களும் எழுதுவது உண்டு. ஆகவே கடுமையான வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது, அதற்குத் துணை ஆசிரியர் தான் பொறுப்பு என்றாலும், ஆசிரியர் என்ற முறையில் நான் பொறுப்பேற்கிறேன், இப்படிப்பட்ட வார்த்தைகள் பத்திரிகையில் வருவது தவறு என்று நானே குறிப்பிட்டு அவையில் வருத்தம் தெரிவித்து, இப்படி முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைப் பற்றிக் கடுமையான வார்த்தைகள் முரசொலிப் பத்திரிகையில் பயன்படுத்தியிருப்பதற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லி, எப்படிச் சட்டசபையைப் பற்றி பத்திரிகைகள் நடந்து கொள்ளவேண்டுமென்பதற்கு ஒரு வழி வகுத்துக் கொடுப்பதற்குக் காரணமாக இருந்தேன். அந்நாள் முதலமைச்சர் பக்தவத்சலமும் மற்ற கட்சித் தலைவர்களெல்லாரும் பாராட்டிப் பேசி, இதற்கு உரிமைப் பிரச்னை தேவையில்லை என்று அந்தக் கருத்தை நிலை நிறுத்தினார்கள். அப்போதெல்லாம் பத்திரிகைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதிலே நான் வழிகாட்டியாக இந்த அவையில் இருந்திருக்கிறேன்.

இப்போது ஏதோ ஆளும் கட்சிக்கு விரோதமான பத்திரிகை, ஆகவே இதை ஆதரிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு இதை விட்டு விடலாம். பொருட்படுத்த வேண்டாமென்ற எண்ணத்தோடு யார் பேசியிருந்தாலும் நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், அதில் குறிப்பிடப்பட்டு இருப்பது நான் உறுப்பினர்களைச் சாதாரணமானவர்கள் என்று கருதினேன் என்று ஒரு குற்றச்சாட்டு, திமிரோடு பேசினேன் என்று மற்றொன்று, அடுத்து தவறான தகவல் தந்தேன் என்பது. இதிலே திரு. கே. டி. கே. தங்கமணி கேட்ட கேள்வியை

வைத்துக்கொண்டு நான் சொன்ன பதில் தவறான தகவல் என்பது இந்த பத்திரிகையில் குற்றச்சாட்டு. கே. டி. கே. தங்கமணி கேட்டது, "நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு டில்லியிலே சொந்த வீடு இருப்பதால், அவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு டிஸ்கரேஜ் செய்யப்படுமா" இது தங்கமணி கேட்ட கேள்வி. நான் சொன்ன பதில் "எல்லா நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் டில்லியிலே சொந்த வீடு கிடையாது" என்று. "திரு. தங்கமணி அவர்கள் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப் பினர்கள் எல்லோருக்கும் வீடு கிடைக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்" என்று சொன்னேன். இது திமிரான பேச்சல்ல: நானும், அவரும், மற்ற உறுப்பினர்களும் சில நேரங்களில் மகிழ்ச்சியாகப் பரிமாறிக் கொள்கிற நகைச் சுவையே தவிர வேறு அல்ல.

நான் மேலும் சொன்னேன். "வீடு சிலருக்கு இல்லாத காரணத்தினால் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் உரிய கட்டணத்தைச் செலுத்தி, தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்" என்று நான் சொன்னேன். இதிலே எங்கே திமிரின் வாடை இருக்கிறது, எங்கே நான் சரியான தகவலைச் சொல்லவில்லையென்று உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இது உள்ளபடியே நான் சொல்லாத ஒன்றை நான் தவறான தகவல் கொடுத்தேன் என்ற குற்றச்சாட்டுக்கு என்னை ஆளாக்கி இதிலே எழுதப்பட் டிருக்கிறது. திரு. ஹாண்டே அவர்கள் தன்னைப்பற்றி ஆளும் கட்சிப் பத்திரி கையில் எழுதப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். சட்டசபை உறுப் பினர்கள் பத்திரிகையில் எழுதுவது தங்கள் உறுப்பினர் உரிமையை பாதிக்கப் படுவதாக இருக்கிறது என்று கருதுவார்களானால் இந்த அவையின் கவனத் திற்குக் கொண்டு வருவதில் தவறு இல்லை என்று சொல்லி, இதை உரிமைக் குழு விற்கு அனுப்புவது தான் சிலாக்கியமானது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்னையில் என்னுடைய முடிவை நானே நான் அறிவிக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு

மு.ப. 11-00

டீசல் ஆயில், பெட்ரோல் தட்டுப்பாடு குறித்து

DR. H. V. HANDE: Hon. Mr. Deputy Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the scarcity of diesel oil and petrol in our State, particularly in Madurai district and the consequent hardships caused to the public.